## 23–வது ‘தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப்’ விளையாட்டுப் போட்டிகளை

# சென்னையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 23வது தேசிய மாற்றுதிறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கி வைத்து வீரர், வீராங்கனைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, பார்வையிட்டார் . இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. இந்திய பாராலிம்பிக் கமிட்டியின் தலைவர் பத்ம பூஷன் தேவேந்திர ஜஜாரியா, இந்திய பாராலிம்பிக் கமிட்டியின் துணைத் தலைவர் சத்ய பிரகாஷ் சங்வான், பாரா தடகள விளையாட்டு சங்க தலைவர் சத்ய நாராயணா, அர்ஜுனா விருது மற்றும் பாராலிம்பிக்ஸில் தங்க பதக்கம் பெற்ற பாரா தடகள வீரர் பத்மஸ்ரீ டாக்டர். மாரியப்பன் தங்கவேலு, இந்திய பாரா தடகள வீராங்கனை பத்மஸ்ரீ திருமதி தீபா மாலிக், தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.கிருபாகர ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

## 30 மாநிலங்களில் இருந்து 1,500 க்கும் மேற்பட்ட சிறந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்பு!

**சென்னை,பிப்.20-**

**சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 23-வது தேசிய பாரா தடகள சாம்பியன் ஷிப் துவக்க விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.**

நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

நான் இன்று மிகுந்த பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் 23-வது `தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப்'பைத் தொடங்கி வைக்க இங்கு வந்துள்ளேன். இந்த சிறப்புக்குரிய தேசிய விளையாட்டுப் போட்டியை, நாம் சென்னையில் நடத்துவதில் தமிழ்நாடு பெருமிதம் கொள்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில், நமது திராவிட மாடல் அரசு தொடர்ச்சியாக, சென்னையில் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது.

### நாட்டின் சிறந்த குடிமக்கள்

இந்த முறை, மாற்றுத்திறனாளி விளையாட்டு வீர நட்சத்திரங்களுக்காக, இந்த தேசிய சாம்பியன்ஷிப்பை நடத்துவதில், நாங்கள் மிகுந்த மனநிறைவாக உணர்கிறோம். இன்று இங்கு வருகை தந்திருக்கும் விளையாட்டு வீரர்கள் நமது நாட்டின் மிகச் சிறந்த குடிமக்கள் ஆவர். இவர்களின் திறமையும் மன உறுதியும் எந்தச் சவாலையும் சமாளிக்கும் என்பதை நிரூபித்து வருகிறார்கள்.

நீங்கள் விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல, பல்வேறு தடைகளைக் கடந்து மகத்துவத்தை அடைய பாடுபடும் அனைவருக்கும் சிறந்த முன்மாதிரிகள். நீங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்தாலும், பல்வேறு மொழிகளைப் பேசினாலும், பல்வேறு சமூகப் பின்புலங்களில் இருந்து வந்தாலும், நீங்கள் அனைவரும் தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சி என்னும் தனித்துவமான குணங்களை ஒருசேர பெற்றிருக்கிறீர்கள். இத்தகைய மேன்மையான நிலைக்கு உங்களைக் கொண்டு வந்த உங்கள் மனஉறுதியையும், கடின உழைப்பையும் நாங்கள் மதிக்கிறோம்.

30 மாநிலங்களில் இருந்து 1,500 க்கும் மேற்பட்ட சிறந்த விளையாட்டு வீரர்கள், இந்தியாவின் மாற்றுத்திறனாளிச் சமூகத்தின் ஒப்பற்றத் திறனை வெளிப்படுத்துவதைக் கண்டு நாங்கள் பெருமைப்படுகிறோம். மன உறுதிக்கும், உந்துசக்திக்கும் எல்லைகள் இல்லை என்பதை உலகுக்குக் காட்ட நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள்.

### சாம்பியன்ஸ் அறக்கட்டளை

தமிழ்நாடு அரசு பாரா அத்லெட்டிக் வீரர்களுக்கு உறுதுணையாகப் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. மற்ற அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் வழங்குவதைப் போலவே, நமது பாரா தடகள வீரர்களுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. நம் மாநிலத்தின் பாரா-தடகள வளர்ச்சிக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் பங்களிப்பை இத்தருணத்தில் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

அறக்கட்டளையின் சார்பில், 230 பாரா-தடகள வீரர்கள் பயன்பெறும் வகையில், ஒட்டுமொத்தமாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நம் வீரர்கள் பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் பங்குபெற்று, 22 தங்கம், 25 வெள்ளி, 21 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 46 பதக்கங்களை வென்று எங்களுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அவர்களின் சாதனைகள் நம் அனைவருக்கும் ஊக்கமளிக்கின்றன.

### ஊக்கத்தொகை ரூ.26 கோடி

பாரா தடகள வீரர்களின் நிலையை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை, தமிழ்நாடு உணர்ந்துள்ளது. அதன் விளைவாக இதுவரை, 205 பாரா-தடகள வீரர்கள், உயர் ஊக்கத்தொகை ரூ.26 கோடி பெற்று பயனடைந்துள்ளனர். இந்த உயர் ஊக்கத்தொகை மற்ற விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிக்குச் சமமாகும். இது அனைத்து விளையாட்டு வீரர்களையும் சமமாக நடத்துவதற்கான திராவிட மாடல் அரசின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

### அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகள்

அத்துடன், 2023-24-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் அறிவிப்பின்படி, தமிழ்நாடு முழுவதும் 6 இடங்களில் பாரா-தடகள அரங்கங்களை நம் திராவிட மாடல் அரசு நிறுவ உள்ளது. இந்த அரங்கங்கள் பயிற்சிக்கும் போட்டிகளுக்கும் உலகத்தரம் வாய்ந்த வசதிகளையும் உள்கட்டமைப்பையும் பெற்றிருக்கும். விளையாட்டு வீரர் நலத்திட்டங்கள் சிலவற்றை, இங்கு குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

`எலைட் திட்டம்' மூலம் 4 பாரா தடகள வீரர்களும், `மிஷன் சர்வதேச மெடல்கள் திட்டம்' மூலம் 9 விளையாட்டு வீரர்களும், `சாம்பியன்கள் மேம்பாட்டுத் திட்டம்' மூலம் 10 விளையாட்டு வீரர்களும் பயன் பெறுகிறார்கள். இந்த முன்னெடுப்புகள், நமது பாரா-தடகள விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறந்து விளங்க தேவையான உதவிகளைச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச அரங்கில், துளசிமதி முருகேசன், டி.மாரியப்பன், மனீஷா ராமதாஸ், நித்யஸ்ரீ சுமதி சிவன் ஆகிய நான்கு வீரர்களும் பாரீஸ் பாராலிம்பிக்ஸில் பதக்கங்களை வென்று, நம் நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளதைப் பகிர்ந்துகொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகள் நமக்குப் பதக்கங்களை மட்டுமல்ல, உலக அரங்கில் அங்கீகாரத்தையும் கொண்டு வந்துள்ளன. தேசிய விளையாட்டு விருதுகள்-2024-இன் போது அவர்களில் மூவருக்கு மதிப்புமிக்க `அர்ஜுனா விருது' வழங்கப் பட்டது என்பதையும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறேன். இந்த அங்கீகாரத்திற்கு அவர்கள் முற்றிலும் தகுதி வாய்ந்தவர்கள்.

விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ், மாற்றுத் திறனாளி வீரர்களுக்கு அரசுப்பணி வழங்கப்படுவதையும் நமது அரசு உறுதி செய்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்வுக்காகக் கூடியுள்ள இந்தியாவின் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களின் மிகப் பெரிய இந்தச் சந்திப்பு முன்னேற்றம் மற்றும் ஒற்றுமையின் ஆகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் வெற்றிபெறுவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் உறுதி செய்வதற்காக, உள்கட்டமைப்புகளை மேலும் மேம்படுத்த, நமது அரசு உறுதிபூண்டுள்ளது. இங்கு கூடியுள்ள அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் நான் கூற விரும்புவது: இந்த சாம்பியன்ஷிப்பின் உண்மையான ஹீரோக்கள் நீங்கள். நீங்கள் எதிர்கால சந்ததியினரை ஊக்கப்படுத்துகிறீர்கள். எந்த சவாலும் உங்களுக்கு வெல்லமுடியாதது அல்ல; எந்தக் கனவும் அடையமுடியாதது அல்ல என்பதை அவர்களுக்குக் காட்டுகிறீர்கள். இந்த சாம்பியன்ஷிப்பில் பங்கேற்கும் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சிறப்பாக வெளிப்படுத்துங்கள்

தமிழ்நாட்டின் விருந்தினர்களாக வந்திருக்கும் நீங்கள், உங்கள் வீட்டில் இருப்பது போல வசதியாக உணரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் திறமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்தவும், இந்தப் போட்டிகளை முழுமையான மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளவும், நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம். இந்த சாம்பியன்ஷிப் நிகழ்ச்சியில் நீங்கா நினைவுகளையும், புதிய நட்புகளையும் பெறுவதோடு, விளையாட்டில் புதிய உச்சங்களையும் தொடுவீர்கள் என்று நம்புகிறோம். இந்த சாம்பியன்ஷிப் போட்டி நீங்கள் இன்னும் மிகப்பெரிய சாதனைகளைச் செய்ய வழி வகுக்கட்டும். அனைவரையும் உள்ளடக்கி விளையாட்டின் வழியே நல்லுணர்வைப் பேணுவோம். இங்கே விளையாட்டுப் போட்டிகள் இனிதே தொடங்கட்டும்!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 20.02.2025 வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில், நடைபெற உள்ளது.

மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.இரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ் எம்.பி., க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில், நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் :

- கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள்.
- இந்தியைத் திணிக்கும், கல்விக்கான நிதியைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன கூட்டங்களை நடத்துதல்...
- கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18

நாள் : 18-02-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி








ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து முதற்கட்டமாக தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை ஒன்றிய சுங்கத்துறை அலுவலகம் அருகில் நேற்று முன்தினம் 18.2.2025 செவ்வாய்க்கிழமை நடைபெற்றதைத் தொடர்ந்து தோழமை தலைவர்களும் துணை முதல்வர் அவர்களும் வருகின்ற பாதையிலே சாலையோரத்தில் மக்கள் ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவிக்கின்ற வகையில் தனது வீட்டு வாசலில் ஒன்றிய அரசை எதிர்க்கும் வகையில் வண்ண கோலமிட்டு தங்களது எதிர்ப்பை காட்டிய காட்சி.